# ஒரு கோடி ஏழைக் குடும்பங்கட்கு

## கலைஞர் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டம்

## தொடக்க விழா: 23.07.2009

## வாழ்த்துரை: டாக்டர் வா.செ. குழந்தைசாமி

பெருமதிப்பிற்குரிய விழாத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே, மைய அரசின் நல்வாழ்வு துறை அமைச்சர் மாண்புமிகு குலாம் நபி ஆசாத் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களே மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, அறிஞர் பெருமக்களே, பெருதிரளாகக் கூடியிருக்கும் அவையினரே,

இவ்வினிய விழாவில் பங்கேற்பதில் நான் அளவு கடந்த மகிழ்ச்சியும், மன நிறைவும் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரில் அமைந்த இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் விவரங்கட்கு வரும் முன் ஒரு செய்தியைக் கூற விரும்புகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்கட்கு மிகவும் பிடித்தமான நூல் என ஒன்று இருக்குமாயின் அது திருக்குறள் தான். உலகில் எந்தக் கவிஞனும் பெறாத பெருமை திருவள்ளுவர் பெறும்படியாக அவருக்கு 133 அடி உயரத்தில் சிலை எழுப்பியவர் கலைஞர் ஆவார். உடல் நலம் பேணும் மருத்துவம் பற்றிப் பேசும் பொழுது வள்ளுவர் ஒரு கருத்தை முன் வைக்கிறார்.

உற்றவன் தீர்ப்பான மருந்து உழைச்செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து [950]

இந்தக் குறளில் உற்றவன் என்பது பிணியுற்றவன் அதாவது நோயாளி, அவனுக்கு நான்கு குணங்கள் வேண்டும் என்கிறார் பரிமேலழகர்.

1. நோய் நிலை உரைத்தல்
2. மருத்துவன் வழி விற்றல்
3. செல்வம் உடைமை
4. மருத்துத் துன்பம் பொறுத்தல்

அதாவது முதலாவதாக நோயாளிக்குத் தன் நோய் என்ன என்று சொல்லத் தெரிய வேண்டும். இரண்டாவதாக மருத்துவன் என்ன பத்தியம் வைத்தாலும் அதை ஏற்று நடக்க வேண்டும். மூன்றாவது இதுதான் மிகவும் முக்கியம் செல்வமுடைமை, அதாவது மருத்துவத்திற்குத் தேவையான செலவு செய்யும் பண வசதி, நோயாளிக்கு வேண்டும். எனவே உடல் **நலத்திற்கு முக்கியமான தேவை எனக் கருதப்படும் மருத்துவ வசதி பெற வேண்டுமானால் அது பண வசதி உடையவர்கட்குத் தான் கிடைக்கும் என்ற**

நிலைமை இன்று, நேற்று அல்ல 2000 ஆண்டுகட்கு முன்பு வள்ளுவர் காலத்திலேயே இருந்திருக்கிறது.

2000 ஆண்டுகட்கு முன்பிருந்தே ஏழைக்கு எட்டாது இருந்த மருத்துவத்தை இன்று ஏழைகள் அனைவருக்கும் எட்டும் வகையில் இலவச மருத்துவம் என்று ஒரு மாபெரும் மாற்றத்தை, காப்பீட்டுத் திட்டம் மூலம் உருவாக்கிய பெருமை கலைஞர் அவர்களைச் சேரும். ஆன்மாவில் நம்பிக்கையுள்ள வைதீகர்கள் மொழியில் சொல்வதனால் இன்று இங்கு கூடியிருக்கும் நாம் வாழ்த்துவது போலவே எங்காவது இருந்து வள்ளுவரின் ஆன்மா கலைஞர் அவர்களை வாழ்த்தும்.

The Hon'ble Minister for Health and Family Welfare, I may inform you that Dr. Kalaiangar's Health Insurance Scheme has a great significance in terms of ancient Tamil literature and culture.  Thiruvalluvar, one of our great poets, has made a significant statement concerning medicine.  He says, according to the commentator, that a patient must have four qualities;

1. He must be able to explain the nature of the disease
2. He must strictly abide by the advice of the doctor.
3. He must be rich enough to be able to make payment to the doctor.
4. He must bear the audience or deal of treatment.

Sir your could see that of the four qualities an important quality is the ability of the patient to make payment.  It is therefore obvious that even in ancient Tamil Nadu, since the days of the fore fathers; medicine had been beyond the reach of a poor person.  For the first time in the 3000 year history of Tamil Nadu medicine has come well within the reach of every poor person in the society.  Perhaps Kalaingnar, the Chief Minister is the greatest contribution to the poor for the preservation of the health.

மனித சமுதாயத்திற்கு உடல் நலம் எவ்வளவு முக்கியம் என்பதை ஒரு வரலாற்றுச் சான்று கூறி விளக்க விரும்புகிறேன். இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் உலக மக்கள் தொகை 605 கோடி: இதில் 200 கோடி மக்கள் கிறித்தவர்கள், அதாவது மூன்றில் ஒரு பங்கு தொகையினர் கிறித்தவர்கள். உலகில் மிகப் பெரிய மதம் கிறித்தவ மதம். எல்லா நாடுகளிலும் இந்த மதத்தைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிறுவனங்களின் பணிகளை ஆய்வோமானால், அவற்றுள் முதலிடம் வகிப்பவை இரண்டு.

- ஒன்று கல்வி,
- மற்றொன்று மருத்துவம்,

எல்லா நாடுகளிலும் மருத்துவ நிலையங்களைப் பரவலாக ஏற்படுத்தியிருப்பது மட்டுமல்லாது பிணியாளர்களுக்கு உதவுவதில் இந்த மதத்தைச் சார்ந்தவர்கள் முன்னணியில் இருக்கிறார்கள் என்பது உலகில் எல்லோரும் அறிந்த ஒன்று. இது இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. இதற்கு நீண்ட வரலாறு உண்டு. இதை ஆரம்பித்து வைத்தவர், இயேசுநாதர் தான். இயேசு அதிக நாட்கள் வாழவில்லை. அவர் வாழ்ந்த காலம் முப்பத்து மூன்று ஆண்டுகள் தான். அவர் தமது வாழ்நாளில் செய்த பணிகளில் முக்கியமானது என்று பார்ப்போமானால் நோய்யுற்றவர்களுடைய நோயைத் தீர்ப்பதுதான். அவர் குருடர்களைப் பார்வை பெற்றுப் பார்க்க வைத்தார். செவிடர்களைக் கேட்க வைத்தார். தொழு நோய்யர்களின், துன்பத்தை முழுமையாக நீக்கினார். காக்கை வலிப்பில் இடர்பட்டவர்களின் துயர் நீக்கினார். இன்னும் சொல்லப்போனால் இறந்தவர்களையும் எழுப்பினார். இந்தப் பணியை அவர் எல்லா நாட்களிலும், எல்லா நேரங்களிலும் செய்து வந்தார்.

நீங்கள் எல்லோரும் அறிவீர்கள் இயசே ஒரு யூதர். யூதர்களுக்கு சனிக்கிழமை ஓய்வு நாள். ஓய்வு நாள் அவர்கட்குப் புனித நாள். ஒரு நல்ல யூதன் அந்த நாளில் எந்த சேலையும் செய்யக்கூடாது. அப்படியானால் எது எது எல்லாம் வேலை என்ற கேள்வி எழுகிறது. யூதர்களுடைய வேதம் 37 செயல்களை வேலை என்று பட்டியலிடுகிறது. அந்த 37 செயல்களில் பெண்கள் கண்ணாடியில் பார்ப்பதும் ஒரு வேலை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கண்ணாடியில் பார்ப்பது எப்படி வேலையாகும் என்ற கேள்வி எழுவது இயல்பு. அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம், கண்ணாடியில் பார்த்தால் ஒரு கால் ஏதாவது ஒரு நரை முடி தோன்றும், நரை முடி தோன்றினால் பெண்கள் அதைக் கட்டாயம் பிடுங்குவார்கள். அப்படி நரை முடியை பிடுங்குவதும் வேலைதான் என்று யூதர்களுடைய வேதம் கூறுகிறது. அந்த அளவுக்கு, கடுமையாக யூதர்கள் ஓய்வு நாளைக் கடைப்பிடித்து வந்தார்கள். ஆனால் இயசேநாதர் நோயுற்று வந்தவர்களை, ஓய்வு தான் என்று பாராமல் எல்லா நாளும், எல்லா நேரமும் குணப்படுத்தினார். எனவே வைதீக யூதர்கள் அவர் யூத மதத்தின் விதிகட்கு எதிராகச் செயல்படுவதாகக் குற்றம் சாட்டினார்கள். அதற்கு அவர் சொன்னார்:

> நோயுற்றவருக்கு நோய் தீர்ப்பது என்பது கடவுளுக்குச் செய்யும் சேவை. கடவுளுக்குச் சேவை செய்வதற்கு எந்த நாளும் தடையானது அல்ல, எனவே எல்லா நாளும் நோய் தீர்க்கும் பணியைச் செய்யலாம்

என்று இயேசு பிரகடனம் செய்தார். எனவே இறைவனின் மகனான இயேசுவின் தீர்ப்புக்கு ஏற்ப நோய் தீர்ப்பது இறைவனுக்குச் செய்யும் சேவை. கலைஞர் அவர்களே, தாங்கள் இந்தக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அந்தக் கடவுளுக்குச் செய்யும் பணியான நோய் தீர்க்கும் பணியைத்தான் முன்னிலைப் படுத்தியிருக்கிறீர்கள். எனவே தாங்கள் பக்தர் அல்ல பகுத்தறிவுவாதி என்றாலும் கடவுளுக்குப் பிரியமான ஒரு மகத்தான பணியையே ஒரு சமுதாயம் முழுவதற்கும் செய்திருக்கும் தங்கட்கு, சொர்க்கத்தில் உறுதியாக இடம் உண்டு.

இன்று மருத்துவத் துறை பெரிய அளவில் வளர்ந்திருக்கிறது. முன்னேறிய நாடுகளிலிருக்கும் வளர்ச்சி, வாய்ப்பு அனைத்தும் நமது நாட்டிலும் கிடைக்கும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்போலோ மருத்துவமனை, இராமசந்திர மருத்துமனை போன்றவை கம்பீரமாக நிற்கின்றன. ஆனால் அவற்றைப் பார்க்கும் ஏழை நோயாளி இது நமக்கல்ல என்று நினைக்கிறார். எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வருகிறது.

ஒரு தந்தை தனது இளங்குழந்தையைக் கூட்டிக் கொண்டு தெருவில் நடக்கிறார். அப்பொழுது மழை வந்துவிடுகிறது. மழையில் நனையும் அந்தக் குழந்தை பக்கத்திலிருக்கும் பெரிய வீட்டிற்குள் நுழைய நினைக்கிறது. ஒரு குழந்தைக்கு நமது வீடு, அயலார் வீடு என்று பாகுபாடு தெரியாது. குழந்தைக்கு இன்னும் நமக்கு எது சொந்தம், எது சொந்தமல்ல என்று தெரியாது. கவிஞன் பாடுகிறான்.

மழையில் நனைந்து நடுங்குகிறோம் எதிர்
மாளிகை மாடம் காண்கின்றோம்
நுழைவம் என்று எண்ணுவை என்னுயிரே அவை
உமக்கல்ல என்பது விதி அன்பே.

மழையில் நனையாது பக்கத்திலிருக்கும் மாளிகைக்குள் நுழைய விரும்பிய குழந்தையை இது நமக்கல்ல என்று அன்போடு தந்தை தடுத்துவிடுகிறார். அதைப் போலவே சில கடும் பிணியாளர்கள் எதிர்பாராத பெரிய விபத்தில் அடிப்பட்டவர்கள் தங்களுக்குத் தேவையான மருத்துவ வசதி அப்போலோவில் இருக்கிறது. இராமசந்திராவில் இருக்கிறது. அங்கு செல்லாலாம் என்று என்னும் பொழுது,

> ‘‘அது போன்ற ஏழை எளியவர்கள் அங்கு செல்ல முடியாது என்று தடுக்கிறார். அது நமக்கு அல்ல என்று உறவினர்கள் தடை சொல்கிறார்கள். அந்தத் தடை முழுவதுமாக நீங்கி அப்போலோவும், இராமசந்திராவும் நமக்கு அல்ல என்று இருந்த காலம் மறைந்து விட்டது. இன்று அவை நமக்கும் தான் என்று ஏழைகள் சொந்தம் கொண்டாடும் உரிமையை பிரகடனப்படுத்தும் நாள் தான். இந்த நாள்’’

என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

மருத்துக்கு மனிதனுடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான இடம் உண்டு. இன்று மேலை நாட்டினர்க்கு, பிறக்கும் பொழுது எதிர்பார்க்க கூடிய வயது 80 அல்லது 80—க்கும் அதிகமாகவே இருக்கிறது. ஜூலியர், சீசரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்கள் அவர் இன்றைய இத்தாலியின் ரோம் நகரில் முடி சூடா மன்னனாக விளங்கியவர். அப்பொழுது ரோம நகர் மக்களின் சராசரி வயது 25 தான். இன்று அவர்களின் சராசரி வயது 81—க்கு பக்கமாக இருக்கிறது. இது அறிவியல் தொழில்நுட்ப துறையில் மருத்துவம் கண்ட சாதனையாகும். எனவே மருத்துவக் காப்பீட்டு திட்டம் என்பது ஈடு இணை இல்லாத ஒரு மாபெரும் மக்கள் சேவை.

51 வியாதிகளைப் பட்டியலிட்டிருக்கிறார். மிகவும் முன்னேற்றமான கருவிகளைப் பயன்படுத்தி இன்றே, நேற்றோ கண்டுபிடிக்கப்பட்ட மிகப் புதிய வழிமுறைகளைப் பயன்படுத்தும் மருத்துவம் ஆனாலும் ஒரு லட்சம் வரையில் எவ்வித செலவுமின்றி அந்தச் சிகிச்சை பெறலாம் என்ற ஒரு நிலையைத் தமிழக அரசு உருவாக்கியிருக்கிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது தமிழ் வழக்கு. உடல் நலம் பேணுவது உயிர் நலம் பேணுவதற்கு ஒப்பாகும் என்று சித்தர்கள் கூறிச் சென்றார்கள்.

உடம்பரர் அழியின் உயிரார் அழிவர்
திடம்படு மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே

என்று பாடுவார். தமிழ்நாட்டுச் சித்தர்களின் தலைமகனான திருமூலர். உயிரை வளர்ப்பதற்கு, உடம்பை வளர்க்க வேண்டும். உடம்பை வளர்ப்பதற்கு மருத்துவம் தவிர்க்க முடியாத தேவை. அதனால் தான் தமிழ் நாட்டுச் சித்தர்கள் சித்த மருத்துவம் என்ற ஒரு மருத்துவத் துறையையே உருவாக்கியிருக்கிறார்கள்.

டாக்டர் கலைஞர் அவர்களே. அண்ணாவுக்கு வழிகாட்டியவர் திருமூலர்தான். ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்பது திருமூலர் தந்த பாதை. இன்று அதே திருமூலர், ''உடம்பை வளர்த்தே உயிர் வளர்த்தேன்'' என்று காட்டிய பாதையைப் பின்பற்றி உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டத்தை அளித்திருக்கும் தங்கட்குத் தமிழகம் தலைமுறை, தலைமுறை தோறும் நன்றி சொல்லும்.